வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**SC.No.203 / 2024**

வழக்கு சாட்சி **PW 11**

1873ம் ஆண்டின் 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுப்பிரமணி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் | : பழனி | கணவர் பெயர் | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலுகா | : | வயது | : |
| மாவட்டம் | : | நாள் | : 07.04.2025 |

முதல் விசாரணை:

நான் தற்போது மூனூர் நாகப்பன்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 2 வருடத்திற்கு முன்பு காலை 09, 10 மணியளவில் அம்பிளிக்கை போலீசார் வந்தார்கள். சம்பவ இடத்தில் பேருந்துக்காக நின்று கொண்டு இருந்தேன். என்னிடம் கத்தியை காட்டி இந்த கத்தியால் தான் குத்தினாரா என்று கேட்டார். நான் தெரியவில்லை என்று சொல்லிவிட்டேன். நான் வெள்ளைத்தாளில் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.8. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக்க அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் சாட்சியை பிழற் சாட்சியாக அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)

அம்பிளிக்கை சார்பு ஆய்வாளர் அம்பிளக்கை காவல் நிலைய குற்ற எண்.73/2022, இ.த.ச பிரிவுகள் 294(பி), 342, 307 ன் கீழான எதிரிகள் ரவிக்குமார், மணிகண்டன் ஆகியோர்களை 05.06.2022ம் தேதி அதிகாலை 05.00 மணக்கு வெரியப்பூர் பஸ்டாப் அருகே வைத்து கைது செய்து ரவிக்குமாரை விசாரணை செய்த போது அவர் யாருடைய தூண்டுதலும் வற்புறுத்தலுமின்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என்முன்னிலையிலும் சாட்சி பழனி முன்னிலையிலும் பதிவு செய்ததை நான் நேரில் பார்த்தும் அதில் முதலாவதாக சாட்சி கையொப்பம் செய்துவிட்டு எதிரி எனக்கு உறவினர் என்பதால் தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M Digitally

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**SC.No.203 / 2024**

வழக்கு சாட்சி **PW 10**

1873ம் ஆண்டின் 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முத்துகிருஷ்ணன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் | : சுப்பன் | கணவர் பெயர் | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலுகா | : | வயது | : |
| மாவட்டம் | : | நாள் | : 07.04.2025 |

முதல் விசாரணை:

நான் தற்போது கள்ளிமந்தையத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 05.06.2022-ம் தேதி இரவு 09.00 முதல் 10.00 மணிக்கு மூனுார் நாகப்பன்பட்டியில் அம்பிளிக்கை போலீசார் விசாரித்து கொண்டு இருந்தார்கள். நான் போலிசார் வந்திருக்கிறார்கள் என்று கேள்விபட்டு சென்றேன். சம்பவ இடத்தை பார்வையிட்டு அம்பிளிக்கை போலீசார் வரைபடம் வரைந்து கொண்டு இருந்தார்க்ள. நான் அதை பார்த்தேன். அதில் என்னிடம் சாட்சி கையொப்பம் போடுமாறு கேட்டதன் பேரில் நான் கையெழுத்து செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.7. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை :-

நான் அ.சா.ஆ,7 ல் கையெழுத்து செய்தது இரவு 07.00 மணி முதல் 10.00 மணி வரை என்றால் சரிதான். நான் இரவு காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2025.04.09 09:58:41 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்